# மாகாணசபைத் தேர்தல் முறைமையும் வடக்கு மாகாணசபை தேர்தலும் - 2013 ஒரு நோக்கு

P.K.Piremkumar and K.T.Ganeshalingam,
Department of Political Science, Faculty of Arts, University of Jaffna.
pirem66@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையின் அரசியலில் தனித்துவமான கட்டமைப்பு முறையாக மாகாணசபை முறைமை காணப்படுகிறது. இது இலங்கையில் தீவிரமடைந்திருந்த இன மோதலை தனிப்பதற்கான ஒரு தீர்வைப்பெற்றுக்கொடுக்கும் நோக்கில் 1987ஆம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம், 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் புதிதாக சேர்க்கப்பட்ட 154வது சரத்தின்படி மாகாண சபைகள் உருவாக்கப்பட்டது. அந்தவகையில் வடகிழக்கை தனியான மாகாணமாக அங்கீகரித்து தமிழர் மாகாணமாக உருவாக்கப்பட்டது. இது 2007 ஆம் ஆண்டு வரையும் ஒரே மாகாணமாக விளங்கியதுடன் சிங்கள தீவிரவாத சக்திகளால் தொடுக்கப்பட்ட வழக்கின் பிரகாரம் வட மாகாணம் தனித்து கிழக்கிலிருந்து பிரிக்கப்பட்டது. அதன்பிரகாரம் 2013 இல் வடமாகாண சபைக்கான தேர்தல் நடாத்தப்பட்டு ஓர் மாகாணசபை அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

## 1. ஆய்வு அறிமுகம்

மாகாணசபை முறைமையானது 1987ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது.ஆனால் 2013 வரை வடமாகாண சபைக்கு சுதந்திரமான தேர்தல் ஒன்று நிகழாத அரசியல் சூழல் காணப்பட்டது. 2010இல் கிழக்கு மாகாணசபை தேர்தலைச் சந்தித்தபோதும் இதனை நெருக்கடிமிக்க தேர்தல் நடத்தையாகவே கருதப்பட்டது. இந்தவகையில் வடமாகாணசபைத்தேர்தல் 21-09-2011 அன்று இடம் பெற்றது. இத்தேர்தலில் பல்வேறு கட்சிகளும் சுயேட் சைக் குழுக்களும் போட்டியிட்டமை தமிழ்மக்களின் அரசியல் கலாசாரத்தை வெளிப்படுத்தியது. இதனடிப்படையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதிகளவான ஆசனங்களை (30) கைப்பற்றி வடமாகாண சபையை ஆட்சி செய்து வருகிறது.

## 2. இலக்கிய மீளாய்வு

அம்பலவானர் சிவராஜா[1] "இலங்கை அரசியல்" எனும் நூலில், 1987ம் ஆண்டில் மாகாணசபை உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த இலங்கை இந்திய ஒப்பந்தம் மற்றும் 1987 இற்கு முன்னர் காணப்பட்ட உள்ளூராட்சியமைப்பு தொடர்பாக விரிவான விளக்கங்கள் காணப்படுவதால் இவ்ஆய்வுக்கு பொருத்தமானது என இந்நூல் கொள்ளப்படுகிறது.

அசோக குணவர்த்தன [2] இலங்கையின் மாகாண சபைகள் அதன் செயற்பாடுகளும் சேவைகளும் எனும் நூல் மாகாணங்களின் அரசாங்க முறைமை எனும் தலைப்பின் கீழ் சட்டத்துறை நீதித்துறை நிர்வாகத் துறை ஆகிய மூன்று துறைகளினதும் கடமைகள் செயற்பாடுகளை விரிவாக ஆராய்கிறது. இலங்கை ஜன நாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பு – 1978இல் 13 வது சீர்திருத்தத்தில் மாகாணசபைகளுக்கான பகிர்ந்தளிப்புக்கள் 154 (ஆ) இல்,[3].

- உள்ளூர் சட்டமும் ஒழுங்கும்
- காணியும் காணியமர்வும்
- விவசாயமும் கைத்தொழிலும்
- கல்வியும் கலாசாரமும்

ஆகிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளன. வட மாகாணசபையின் செங்கோல் மகாத்மியம் (2013) வட மாகாணசபைத் தேர்தலின்பின்னர் வெளியிடப்பட்ட இம் மகாத்மியத்தில் வட மாகாணம் தொடர்பான புவியியல் ஆள்புலம், குடியியல், சமூகம், கலாசாரம், விழுமியம் போன்ற சகல விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. வடமாகாணம் தொடர்பான ஆய்வு என்பதால் இவ்வெளியீடானது பயனுள்ளதாக அமைந்தமையால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

முகுந்தன் ஏ.பீ 'தமிழருக்கு இனியாவது சாதகமான நிலைமை தோன்றுமா?', 'சீலன் சி.ப காலத்திற்கேற்ப இராஜ தந்திர ரீதியில் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்' (2013-09-04) எனும் கட்டுரைகள் ஆய்வில் வட மாகாணசபை செயற்பாடுகள் எதிர்கால எதிர்பார்க்கைகள் என மக்களின் எண்ணப்பாடுகள் தொடர்பான விடயங்கள் ஆராய உதவுகிறது.

**கருதுகோள்**

- ❖ வடக்கு மக்களின் மனோநிலையை வெளிப்படுத்தும் தேர்தலாக வடக்கு மாகாணசபைத் தேர்தல் விளங்குகிறது.
- ❖ ஒரு கட்சியின் ஆதிக்கம் தமிழ் தேசியத்தின் அடையாளமாக அமைந்துள்ளது.
- ❖ தமிழ் மக்களின் மிதவாத அரசியல் ஈடுபாட்டை வளர்த்தெடுத்தல்.

**3. நோக்கம்**

1. மாகாணசபை செயற்பாடுகளில் மக்கள் பங்குபற்றலை அதிகரிக்கும் வழிகளை இனங்காணுதல்
2. வடமாகாணத்தில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் நடத்தையின் மாற்றங்களை இனங்காணல்.
3. தேர்தல் மூலம் தமிழ் மக்களின் அரசியல் நம்பிக்கையை எப்படி கட்டிவளர்ப்பதென இனங்காணுதல்.

**4. முறையியல்**

முதல் நிலைத்தரவுகளை ஆதாரமாகக் கொண்டு இவ் ஆய்வு வடிவமைக்கப்பட்டாலும் முழுமையாக இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியே ஒழுங்குபடுத்தப்படுகிறது. சமூகவிஞ்ஞானத்தின் ஆய்வுத் தன்மைகளை சார்ந்து வடிவமைக்கப்படும்போது தமிழ் மக்களின் அரசியலில் காணப்படும் மாற்றங்களை அவதானிப்புக்கூடாகவும் உணர்வுகளை வெளிப்பாட்டுத் தன்மையூடாகவும் இனங்காண முடிகிறது. இரண்டாம் நிலைத்தரவுகளில் விமர்சனம் மதிப்பீடுகள் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் கருதுகோளின் வாய்ப்புக்கள் பரிசீலிக்கப்படுகிறது. இவ் ஆய்வு தத்துவார்த்த தளத்திலும் உளவியல் தளத்திலும் மாறுதல்களை தமிழ்மக்கள் எவ்வாறு அடைந்துகொள்ள முயலுகின்றனர் என்பதை நிறுவுகிறது.

**வடமாகாணசபைத் தேர்தல் முடிவுகள் 2013**

**தேர்தல் முடிவுகள்**

வடக்கு மாகாணசபைத் தேர்தல் ஒரே பார்வையில்




| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கைத் தமிழரசுக் கட்சி (த.தே.கூ) | 353595 | 78.48 | 30 |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | 82838 | 18.38 | 07 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 6761 | 1.50 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 405574 | 92.75 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 35239 | 7.25 | |
| மொத்த வாக்குகள் | 485813 | 67.52 | |
| பதிவு செய்யப்பட்டவை | 719477 | | |




| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கைத் தமிழரசுக் கட்சி (த.தே.கூ) | 213 907 | 84.37 | 14 |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | 35 995 | 14.20 | 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 833 | 0.34 | |
| செல்லுபடியான வாக்குகள் | 253 342 | 92.59 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 20 279 | 7.41 | |
| மொத்த வாக்குகள் | 273 821 | 64.13 | |
| பதிவு செய்யப்பட்டவை | 426 813 | | |




| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கைத் தமிழரசுக் கட்சி (த.தே.கூ) | 37 079 | 81.37 | 03 |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | 7 897 | 17.37 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 300 | 0.66 | |
| செல்லுபடியான வாக்குகள் | 45 459 | 90.57 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4 735 | 9.43 | |
| மொத்த வாக்குகள் | 50 194 | 73.17 | |
| பதிவு செய்யப்பட்டவை | 68 600 | | |

**முல்லைத்தீவு மாவட்டம்**




| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கைத் தமிழரசுக் கட்சி (த.தே.கூ) | 28 268 | 78.36 | 04 |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | 7 209 | 20.04 | 01 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 199 | 0.33 | |
| ஐக்கிய தேசியக் கட்சி | 197 | 0.33 | |
| செல்லுபடியான வாக்குகள் | 33 982 | 92.73 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2 820 | 7.27 | |
| மொத்த வாக்குகள் | 38 802 | 72.28 | |
| பதிவு செய்யப்பட்டவை | 53 683 | | |




| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கைத் தமிழரசுக் கட்சி (த.தே.கூ) | 33 118 | 62.22 | 03 |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | 13 104 | 28.38 | 01 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 4 371 | 8.39 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 187 | 0.33 | |
| செல்லுபடியான வாக்குகள் | 53 228 | 94.68 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2 989 | 5.32 | |
| மொத்த வாக்குகள் | 56 213 | 74.22 | |
| பதிவு செய்யப்பட்டவை | 75 737 | | |




வடமாகாணசபைத் தேர்தலில் வடமாகாண மக்கள் 92.5விகிதம் ஒரு கட்சி சார்பாக வாக்களித்திருப்பது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதனால் ஒரு கட்சி மேலாதிக்கத்தன்மையே நிலைபெற வாய்ப்புள்ளது. இருந்தபோதிலும் வடமாகாண மக்கள் இத்தேர்தலில் அதிகளவில் வாக்களித்துள்ளார்கள்.

**மன்னார் மாவட்டம்**

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கைத் தமிழரசுக் கட்சி (த.தே.கூ) | 41 225 | 66.10 | 04 |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | 16 633 | 26.67 | 02 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1 991 | 3.19 | |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1 769 | 2.84 | |
| செல்லுபடியான வாக்குகள் | 62 365 | 93.39 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4 416 | 6.61 | |
| மொத்த வாக்குகள் | 68 781 | 70.56 | |
| பதிவு செய்யப்பட்டவை | 94 644 | | |

இவ்வடிப்படையில் யாழ் மாவட்டத்தில் மக்கள் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு அதிகளவில் வாக்களித் திருப்பது என்பது தமிழ் மக்கள் போரினால் விரக்தியுற் றமையே காரணமாகும். இம் மாவட்ட மக்கள் கல்வியறிவு வீதம் கூடியவர்களாக காணப்படுவதால் அனைவரும் வாக்களிப்பில் பங்குபற்றியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 90.5வீகிதமான வாக் குகள் செல்லுபடியான வாக்குகளாகவே காணப்பட் டன. இம்மாவட்டத்தில் மக்கள் இறுதிக்கட்ட போரினால் பல்வேறுபட்ட அசம்பாவிதங்களை எதிர்கொண்ட மையினால் தமக்கான அடையாளத்தினை ஏற்படுத்த விரும்பி மக்கள் வாக்களித்திருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரை இம் மாவட்ட மக்களும் இறுதி யுத்தத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்டமையால் அதன் வெளிப்பாடாக தேர்தலை கணித்துள்ளனர். இதனாலேயே அதிகமான ஆசனங்களை இலங்கை தமிழரசுக்கட்சி பெறமுடிந்தது. தமிழ் மக்களின் கலை கலாச்சார பண்பாட்டு அம்சங்கள் அனைத்தும் ஒரே தன்மையில் காணப்படுவதையும் சுட்டிக்காட்ட முடியும்.

மன்னார் வவுனியா மாவட்டத்திலும் மக்கள் தேசிய உணர்வோடு வாக்களித்தனர். தமிழர் தமது அரசியல் நடத்தையில் காட்டியுள்ள புதிய அம்சமாக மாகாண சபைத் தேர்தலை காணமுடியும். இது மீண்டும் தமிழ் மக்கள் அரசியல் ரீதியான அணுகுமுறைக்குள் தமது சுதேச அடையாளத்தை வெளிப்படுத்த ஆரம்பித்துள் ளமை உணர்த்தப்பட்டுள்ளது. தமது உரிமையினை வென்றெடுக்கும் கலை கலாச்சார பண்பாட்டு விழுமி யங்களை பாதுகாக்கும் நோக்கோடும் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநிறுத்தும் நோக்கோடும் செயற்பட் டமையினைக் காணமுடிகிறது. நிராகரிக்கப்பட்ட வாக்குகள் ஏறக்குறைய 10 சதவிகிதமாக காணப்பட்டதனால் மக்கள் மத்தியில் வாக்களிப்பு பற்றிய அறிவூட்டல் அவசிய மாகின்றது. அதனை ஏற்படுத்தும் போது வாக்களிப்பினை அதிகரிக்க முடியும்.

**5. முடிவுரையும் சிபார்சுகளும்**

வடமாகாணசபைக்கான தேர்தல் நடந்து முடிந்து விட்ட நிலையிலும் அத் தேர்தல் தொடர்பான பரபரப்புக்கள் இன்றும் அடங்கவில்லை. தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு மக்கள் வழங்கிய 2/3 க்கும் அதிகமான பெரும் பான்மையை வழங்கியமை வடக்கு மக்களின் ஒற்று மையையும் தேசிய உணர்வையும் வெளிப்படுத்து கின்றது. இதனை தனித்துவமாக சர்வதேசம் கருதுகிறது.

- வாக்களிப்பதை முக்கியத்துவப்படுத்தும் விடயத்தை கருத்தில் கொள்ளுதல் . (பிரதிநிதி தெரிவு)
- நல்லாட்சியை ஏற்படுத்த உதவும் வழிவகை செய்தல்
- அடிப்படை உரிமையும் மனித உரிமைகளையும் நாட்டின் அபிவிருத்தியையும் நிலைநாட்ட முயலுதல்.
- நீதியை நிலைநாட்டுதல்
- உட்கட்சி ஜனநாயகத்தைப் பேணுதல்
- அரசியல் ஸ்திரத்தன்மையை பேணுதல்
- அதிகார தலையீட்டை குறைத்தல்
- சர்வதேச நல்லிணக்கத்தை பாதிக்காத வகையில் செயற்படல்
- சர்வதேச அரசியலை விருத்தி செய்தல்
- மக்களை அரசியல் மயவாக்கத்திற்கு உட்படுத்துதல்

ஆகவே வடமாகாணசபையில் காணப்படுகின்ற பல குறைபாடுகள் காணப்படுகின்ற போதும் தமக்கே உரிய முறையில் அவற்றையெல்லாம். எதிர்கொண்டு வெற்றி கண்டு வடக்குமாகாண மக்களுக்கு மிகச் சிறப்பான

சேவைகளை ஆற்றிவருவதுடன் தமது சேவைகளை மேலும் சிறப்பாக வழங்கவும் முயற்சித்து வருகின்றன. இதன் மூலம் வட இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரினால் பாதிப்படைந்துள்ள வடக்குமாகாணத்தை அடிமட்டத்திலிருந்து கட்டியெழுப்பி இலங்கையில் வளர்ச் சியடைந்த மாகாணமாக மாற்றியமைத்து சுபிட்சமான எதிர்காலத்தை நோக்கி அழைத்துச் செல்ல முடியுமென்பது உண்மையாகும்.

**உசாத்துணை நூல்கள்**

[1] அசோக குணவர்த்தன, “இலங்கையின் மாகாண சபைகள்” (அதன் செயற்பாடுகளும் சேவைகளும்) பஃவரல் வெளியீடு - பக் 7-8

[2] அம்பலவானர் சிவராஜா, “இலங்கை அரசியல்” வெளியீடு சிவா பிறிண்டேர்ஸ், கைதடி - 1989 பக் 171

[3] இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசிய லமைப்பு - 1978

- சட்டத்தரணி சந்துணகுணவர்த்தன, “மாகாணசபைத் தேர்தல் சட்டம்”, வெளியீடு.பஃவரல் பக்-21-22
- சமகாலம், எக்ஸ்பிரஸ் பேப்பர்ஸ்- ஏப்பிரல்.2013 பக்-13-15
- சிவகுலசிங்கம். கு, “வடமாகாணசபை ஒரு கண் ணோட்டம்”, யாழ் தினக்குரல் 09-feb-2013-Sun day, பக்.15-16
- http;//t.wikipedia.long/sri/gve
- www.np.gov.lk/pdf/statinfor 2012.pdf
- www.stap.org/staporgtp/countries/srilanka/ document/ act sandordinance/ 13.